**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4414

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 22.07.2021

Accepted: 15.09.2021

Published: 01.10.2021

Citation:
Remoshan, Vanmathy. "Speaking Tamil Language Is Prohibited for Primary Children by Bilingual Private Schools at the School Premises in Tamil Region in Srilanka." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 2, 2021, pp. 76–85.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4414

*Corresponding Author:
vremoshan@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Speaking Tamil Language is Prohibited for Primary Children by Bilingual Private Schools at the School Premises in Tamil Region in Sri Lanka

**Vanmathy Remoshan**
*Graduate Teacher of English Language*
*BT/PD/Mandur-37 Navakiri Vidyalaya, Sri Lanka*
http://orcid.org/ 0000-0002-5494-2031

**Abstract -** This study presents an overview of the students those who study in the medium of English Language at the private bilingual schools about the prohibition of Tamil Language even though they live in the Tamil Region as a native speaker of Tamil Language. The bilingual children of primary section who have become dominant in English Language learning by the private bilingual schools. On the other hand speaking their mother tongue Tamil is highly prohibited at the schools premises in Tamil Region. The study identifies the term "Bilingual Education" and why speaking of Tamil Language is restricted for the Tamil native children. If there is a student in the bilingual education, he/she can study his/her whole subjects in English Language, at the same time there is no any necessities to stop talking Tamil language at the school premises. So while learning or studying in the medium of English, the student can speak in Tamil language. At last according to the quote of Albert Einstein "Education is not the learning of facts, but the training of the mind to think." But unfortunately nowadays it is changed by these bilingual private schools in Tamil Region. Our children really suffer by the domination of their second language instead of using their mother tongue Tamil.

**Keywords:** Bilingual Education, Kids, Learning, Developing, Personality, Mother Tongue, Prohibition of Tamil Language, Domination of English Language.

**References**

1. Colin Baker. (2014). *A parents' and Teachers' Guide to Bilingualism*. 4th Edition. Multilingual Matters.
2. Douglas, J.W.B. (1964). *The home and the School: A study of Attainent in the primary school*. 2nd Edition. Michigan: Macgibbion & Kee.
3. Holt, J. (1964). *How Children Fail*. New York: Pitman Press.
4. Margaret Donaldson. (1979). *Children's Minds*. w.w.Norton & Company.
5. Pathmathevan. (2018). *Bharathiyar Kavithaigal*. Katpagam Puththakalayam.
6. https://dheivegam.com/tamilkavithaigal/bharathiyar-kavithaigal
7. https://www.britannica.com/topic/Taillanguage

# இலங்கையின் தமிழ் பிரதேசங்களிலுள்ள இருமொழிக் கல்வி தனியார் பாடசாலைகளின் வளாகத்தினுள் தமிழ் மொழி பேசுவது தடை செய்யப்படுகின்றது

***வான்மதி றெமோஸன்***
பட்டதாரி ஆசிரியர் (ஆங்கில மொழி)
மட்/பட்/மண்டூர் - 37 நவகிரி வித்தியாலயா, இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***

*ஆங்கில மொழியில் கற்பித்தலை மேற்கொள்ளும் இருமொழிக் கல்வி தனியார் பாடசாலையில் பயிலும் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட தமிழ்மாணவர்களுக்கு பாடசாலைகளில் தடை விதிக்கப்படுகிறது. தனியார் பாடசாலைகள் சிறுபிள்ளைகளின் மழலைச் சந்தோசங்களில் தாய்மொழியான தமிழை தடைசெய்வதன் மூலம் ஆங்கிலமொழி மூல கற்கையின் ஆதிக்கத்தை மேலோங்க செய்கிறது. இவ் ஆய்வானது இருமொழிக்கல்வி என்றால் என்ன என்பதை அடையாளப்படுத்தும் அதேவேளை தனியார் இருமொழிக்கல்வி பாடசாலைகளில் தமிழ்மொழி பேசுவது கடுமையான முறையில் தடைசெய்யப்படுவதனால் எதிர்கொள்ளும் விளைவு பற்றியும் எடுத்துரைக்க முனைகிறது. அத்தோடு ஆங்கில மொழியில் தனது கல்வியை கற்க விரும்பும் ஒரு மாணவருக்கு தன்னுடைய தாய்மொழி தடை செய்யப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை சுட்டிக்காட்டுவதோடு பாடசாலை வளாகத்தினுள் தமிழ் மொழி பேசுவதினால் அவர்களின் ஆங்கிலமொழி மூல கல்விக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பதையும் வலியுறுத்துவதாக அமைகிறது.*

***முதன்மைச்சொற்கள்:*** *ஆங்கிலமொழி ஆதிக்கம், இருமொழிக் கல்வி, கற்றல், சிறார்கள், தாய்மொழி தடை, மனவெழுச்சி, தமிழ்க்கல்வி*

## அறிமுகம்

கல்வி என்பது தன்னை பற்றிய உண்மைநிலை, உலகப்பற்று, ஏனைய மக்களின் பற்று, ஏதோ ஒன்றினை அடைவதற்கான விருப்பு, தீர்வுகளையும் மதிப்பீடுகளையும் மேற்கொள்வதற்கான உள்ளார்ந்த பிரமாணங்கள், ஆளுமை ஒன்றிணைப்பு ஆகியவற்றினை உள்ளடக்கி, வளர்ச்சி, விருத்தி ஆகிய இரண்டினதும் நீண்டகால செயன்முறைக்கு பங்களிக்கின்ற தனிநபர் இயல்புகளை கற்போனிடம் விருத்தி செய்வதே ஆகும். மேலும் ஒரு சமூகத்தின் கலாசாரத்தை பரப்புவதும், அதனை சந்ததி வழியே கடத்துவதும் கல்வியின் கடமையாகும். எனவே இவற்றையெல்லாம் ஒரு பிள்ளைக்கு வழங்கவேண்டிய பாரிய பொறுப்பு பாடசாலைக்கே உண்டு என்றால் அது மிகையாகாது. இருந்தபோதிலும் பாடசாலையின் பாடத்திட்டத்தினால் மாத்திரம் இவற்றை வளர்க்க முடியாது. எனினும் ஒரு பாடசாலையின் கலைத்திட்டத்தின் உதவியுடன் அறிவோடு சேர்ந்து திறனோடு கூடிய மனப்பாங்கினை கட்டியெழுப்பமுடியும். இதனடிப்படையில் கலாசாரம் சார்பான சமூக மதிப்பீடு, அறிவு, கலாசாரப் பண்புகள் பற்றி மாணவர்களுக்கு போதிப்பதோடு மாணவர்களின் நடத்தை முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவும், கலாசாரம்

பற்றிய ஒரு தெளிவான உணர்வை ஏற்படுத்தவும், தனித்துவமான கலாசார அம்சங்களை பாதுகாக்கவும், மாணவர்களை நெறிப்படுத்தவும் பாடசாலை உதவ வேண்டும். இவ்வாறான அளப்பெரிய சேவையை கொடுக்கவேண்டிய பாடசாலைகள் அதன் பாதையிலிருந்து பிசகியிருப்பதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக தமிழ் பிரதேசங்களில் இயங்கிவரும் தனியார் இருமொழிக்கல்வி பாடசாலைகள் சிறுபிள்ளைப் பருவம் முதற்கொண்டு இவற்றையெல்லாம் கற்றுக் கொடுக்க மறந்துவிடுகின்றன. தங்கள் பாடசாலையில் கல்வி பயிலும் ஒரு பிள்ளை பாடசாலை வளாகத்திற்குள் ஆங்கிலம் பேசுகின்றதோ இல்லையோ நிச்சயமாக தங்களின் தாய்மொழியான தமிழினை பேசுவது மறுக்கப்படுகின்றது. தமிழ் பிரதேசத்தில் தமிழ் பெற்றோருக்கு பிறந்து தமிழ் மொழியினை தாய்மொழியாகக் கொண்ட ஒரு தமிழ் பிள்ளைக்கு தான் கல்வி கற்கும் பாடசாலையில் தமிழ் மொழி பேசுவதை தடை செய்வது கவலைக்குரிய விடயமே ஆகும்.

இதனால் பிள்ளையினுடைய பேசும் திறன் வளர்வதில் பின்னடைவு ஏற்படுவதோடு பேசுவது என்பதே தாமதமாகலாம். ஏனெனில் தனக்கு தெரிந்த ஒரு மொழியை தவிர்த்து விட்டு இன்னுமொரு மொழியை கற்று அறிந்து அதன் பின் பேசுவது சுலபமான காரியம் அல்லவே. அத்துடன் பிள்ளையின் சமனான ஆளுமை விருத்தி, விழுமிய விருத்தி, நடத்தை விருத்தி, தன்னை விளங்கிக் கொள்வதற்கான பயிற்சி, வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கான கற்றல், மற்றவருடன் சேர்ந்து வாழ்வதற்கான முயற்சி, சமாதானத்தை விரும்பும் எண்ணம் மற்றும் சிந்தனை என்பன மறுக்கப்படுவதாகவே கருதமுடியும்.

## ஆய்வு முறையியல்

ஆய்வு நோக்கத்தினை அடைந்துகொள்ளும் முகமாக இவ்வாய்வினை திறம்பட செய்து முடிக்க பண்புசார் ஆய்வு (Qualitative Research Method) மூலமாக தரவுகள் பெறப்பட்டன. இருமொழி தனியார் பாடசாலைகளில் கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் என மொத்தமாக 120 தனிநபர்களிடம் வாய்மொழி மூலம் பெறப்பட்ட நேர்காணலின் தரவுகளை பிரதான மூலமாகவும், ஏனைய இரண்டாம் நிலை தரவுகளை துணைச் சாதனமாகவும் கொண்டு பகுப்பாய்வு முறையில் இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் தமிழ்ப் பிரதேசங்களான யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் இயங்கிவரும் தனியார் இருமொழிக்கல்வி (Private Bilingual) பாடசாலைகளை மையப்படுத்தியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆங்கில மொழியும் உலகமயமாதலும்

ஆங்கில மொழி ஒரு மேற்குலக மொழியாக முதன்முதலில் முன்மத்திய கால இங்கிலாந்தில் பேசப்பட்டது எனினும் இன்று உலகமெங்கிலும் பரவலாக பேசப்படுகின்ற ஒரு மொழியாகும். பேசுகின்றவர்களுக்கும் பேசுகின்ற இடத்திற்கும் ஏற்றாற்போல் வளைந்து கொடுக்கக்கூடிய மொழியாகக் காணப்படுவதனால் மிகத் துரிதமாக உலகமெங்கிலும் நெகிழ்ச்சித் தன்மை கொண்ட சர்வதேச மொழியாக பரம்பி காணப்படுகின்றது. குறிப்பாக உலகின் மூன்றாவது மிகப்பெரிய சுதேச மொழியாகவும் இது கணிக்கப்படுகின்றது. அதேசமயத்தில் உலகத்தின் முதலாவது பொதுமொழி எனவும் அழைக்கப்படுகின்றது. கிட்டத்தட்ட உலகம் முழுவதிலும் ஆங்கில மொழியினை தாய்மொழியாக 380 மில்லியன்

மக்கள் பேசுகின்ற அதேவேளையில் 150 மில்லியன் மக்கள் இரண்டாம் மொழியாகவும் பேசுகின்றனர். மேலும் தொலைத் தொடர்பு, விஞ்ஞானம், மருத்துவம், வான்பயணம், வர்த்தகம், கல்வி, அரசியல், வானொலி மற்றும் பொழுதுபோக்கு என அனைத்து துறைகளிலும் ஆங்கிலமொழி தனது தனித்துவமான ஆதிக்கத்தினை செலுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது.

ஆங்கிலமொழியின் முக்கியத்துவமும், ஆதிக்கமும் நம்மை சுற்றி பரந்து விரிந்துகிடக்கின்ற போதிலும் ஆங்கில மொழியின் தேவையும் அதற்கான கேள்வியும் நமக்கிருந்தாலும் நாம் நம்முடைய அடையாளத்தினை என்றும் மறந்துவிடக்கூடாது. "நம் மொழியிலே நமது அடைாளம்", நமக்கான அடையாளத்தினையும் அங்கீகாரத்தினையும் நம்முடைய மொழியே நமக்கு தருகின்றது. ஆதலால் ஆங்கில மொழியில் கல்வி கற்பிக்கப்படுகின்ற அதேவேளை நமது தாய்மொழியின் அடையாளங்களை நாம் அப்புறப்படுத்த ஆரம்பிக்கின்றோம். குறிப்பாக நம்முடைய தமிழ் பிரதேசங்களில் அமைந்திருக்கும் தனியார் இருமொழி கல்வி பாடசாலைகள் அங்கு கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு நேரடியாகவே தமிழ்மொழியை பேசக் கூடாது என தடைவிதிக்கின்றனர். பிள்ளைகளும் மெல்லமெல்ல தமிழ் மொழியினை புறக்கணிக்கத் தொடங்கிவிடுகின்றனர். காலப்போக்கில் தங்களுக்கென தனித்து வமாய் விளங்கும் தமிழ் மொழியின் அடையாளங்களைத் தொலைத்துவிடும் நிர்பந்தத்திற்குள்ளாகின்றனர். உதாரணமாக தமிழ் மொழியின் அடையாளங்களை எடுத்தியம்பும் தமிழ் இலக்கிய படைப்புக்களான தமிழ் இலக்கிய வர்ணணைக் கட்டுரைகள், ஆய்வுகள், சிறுகதை, கவிதை, பாடல் போன்றவற்றை வாசிப்பதற்கும் அதனை அறிந்து கொள்வதற்கும் இரு மொழிக்கல்வி பாடசாலைகள் பெரிதும் இடமளிப்பதில்லை. ஆங்கில இலக்கிய படைப்புக்களையே பெருவாரியாக முன்னிலைப்படுத்த முனைகின்றனர். ஆனாலும் அவை முழுமையாக வெற்றியடைவதில்லை. மாறாக, பிள்ளைகள் சிறுவயது முதற்கொண்டே தமிழ்மொழி சார்பான அடையாளங்களை பெற்றுக்கொள்வதிலும் அவற்றை அறிந்துகொள்வதிலும் பெரிதாக ஆர்வம் கொள்வதில்லை. ஏனெனில் அவர்களின் தனியார் பாடசாலை ஆசிரியர்கள் அவர்களை தமிழ்மொழியிலிருந்து வழி விலகி நடக்கவே கற்றுக்கொடுக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் தமிழ்மொழிக்கான இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது.

**"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்**
**தமிழுக்கு நிலவென்று பேர் இன்பத்**
**தமிழ் எங்கள், சமூகத்தின் விளைவுக்கு நீர்"**

எனும் பாரதிதாசனின் பாடல் வரிகளுக்கு ஏற்ப நம்முடைய சின்னஞ்சிறு பிள்ளைகள் கொஞ்சும் தமிழைப் பேச ஆரம்பிக்கும் போதே அவர்களை பேசவிடாமல் தடுப்பதும், கல்வி எனும் பெயரில் ஆங்கில மொழியைத் திணிப்பதும் எப்படி நியாயம் ஆகும்? பிள்ளை அவனது தாய்மொழியில் பேசட்டுமே. தேவையெனில் ஆங்கில மொழியை கற்றுக்கொள்ளட்டும். தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவே கருதப்படும். இது தொடர்பாடல் நோக்கங்களுக்கான ஒரு ஊடக மொழியே. ஆங்கிலத்தை நம்முடைய தேவைக்காக நாம் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் நமக்கு உண்டு. ஆனால் "தமிழ் நம்முடைய இரத்தத்தில் ஊறிப்போனது, தமிழ் நம்முடைய அடையாளமேதவிர அவமானம் அல்ல". உலகம் அறியாத வயதிலுள்ள ஒரு பிள்ளைக்கு தமிழ் மொழியை பேசாதே என்று கண்டிக்கும் பொழுது அவன் தமிழ் மொழியை பேசுவது

அவமானமோ, பேசக்கூடாது எனக்கருதி தமிழ் மொழியை தன்னிடமிருந்து விலக்கிக்கொள்ள கட்டாயப்படுத்தப்படுகின்றான். இது தமிழ் இனத்திற்கே இழைக்கப்படும் துரோகமாகும்.

இவை அனைத்துமே அவனுக்கு கல்வியை கற்றுத்தரும் பாடசாலையினால் அரங்கேறுவது தான் ஆச்சரியமான விடயம். எனவே தமிழ் பிரதேசங்களில் அமைந்திருக்கும் தனியார் இருமொழிக்கல்வி பாடசாலைகள் தான் இவ்வாறான தமிழ் மொழி ஒழிப்பு நடவடிக்கைகளை மறைமுகமாக மேற்கொண்டு நம் எதிர்கால சமூகத்தின் விளைவுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. மேலும் ஆங்கில மொழியை கற்பதும் பேசுவதும் தவறான ஒன்றல்ல அதேசமயத்தில் தனியார் பாடசாலை வளாகத்தினுள்கூட தமிழ் மொழியை பேசக்கூடாது என மறுப்பது கண்டிக்கப்படவேண்டியதே ஆகும்.

## தமிழ்மொழி மறுப்பும் கலாசாரமும் பின்னணியும்

ஆங்கில மொழியின் தேவை உலகெங்கிலும் இன்றியமையாததாகவே இருந்தாலும் ஆங்கில மொழியை நாம் கற்க வேண்டிய தேவை அத்தியாவசியமானதாக காணப்படினும் தமிழ் மொழியின் ஆழங்களை அனுபவிக்க நம் பிள்ளைகளுக்கு தடை விதிக்கலாகாது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" எனும் பாரதியின் புகழுரைக்கிணங்க நாம் எத்தனை மொழிகளை கற்றாலும் நமக்கே உரித்தான தாய்மொழியை விட்டு பின்வாங்குவதினால் நம்முடைய கலை, கலாசாரம், பண்பாடு, நாகரீகம், பாரம்பரியம் என சகலவற்றையும் விட்டு பிரிந்து செல்ல எத்தனிக்கின்றோம். எதிர்கால தலைமுறையின் இன்றைய சி றார்களிடமிருந்து நம்முடைய கலாசாரங்களை நாம் மெல்ல மெல்ல நகரும்படி செய்கின்றோம். விசேடமாக தனியார் இருமொழிக்கல்வி பாடசாலைகளில் கல்வி பயிலும் தமிழ் மொழியின் இளைய தலைமுறையானது ஆங்கில மொழிக்கல்வியை கற்பதோடு சேர்ந்து ஆங்கிலேய கலாசாரத்தையும் பின்பற்ற பழகிக்கொள்கின்றனர்.

அதேவேளை தமிழ் மொழியைப் பேச தடை செய்யும் போதே தமிழ் கலாசாரத்தினையும் பண்பாட்டினையும் கைவிட தொடங்கிவிடுகின்றனர். இப்பிள்ளைகளின் நடை, உடை, பாவனையாவும் மேற்குலக பாணியினை ஒத்ததாக மாற்றிக்கொள்கின்றனர். பிள்ளைகள் தங்களின் பெரும்பாலான நேரத்தை பாடசாலைகளிலே கழிக்கின்றனர். எனவே பாடசாலையில் அவர்களுக்கு கற்பிக்கப்படுபவைகளோடு சேர்ந்து அவர்கள் பார்க்கின்ற கேட்கின்ற விடயங்களையும் பின்தொடர்கின்றனர். உதாரணமாக இவர்களின் சாதாரணமான நடைமுறை வாழ்க்கையில் உணவுப்பழக்க வழக்கம், உடையலங்காரம், சிகையலாங்காரம், மற்றும் மேற்கத்தேய பெருமிதம் என எல்லாவற்றிலும் தமிழ்மொழியின் புறக்கணிப்பும், மறுப்பும் நன்றாய் விளங்கும்.

## பெற்றோரின் கவனயீனமும் அறியாமையும்

பிள்ளையின் சகல பின்னடைவுகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் பெற்றோரும் காரணமாக அமைந்துவிடுகின்றனர். கல்வி கற்ற அல்லது கல்வி கற்காத அல்லது போதுமான ஆங்கில அறிவு இல்லாத பெற்றோர்கள் கூட தங்கள் பிள்ளைகளை தனியார் பாட சாலைகளில் ஆங்கில மொழி மூலமாக தங்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள திணிக்கின்றனர். தங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேச வேண்டும், ஆங்கிலத்தில் கவிதை கூறவேண்டும், ஆங்கிலத்தில் பாடல்பாட வேண்டும், ஆங்கில பாடலுக்கு நடனமாட வேண்டும் என்பதெல்லாம் பெற்றோரின் எதிர்பார்ப்பாகவே உள்ளது. சில சமயங்களில் இவை மெய்ப்பட்டாலும் பல வேளைகளில் ஏமாற்றங்களாகவே அமைகின்றன. பெற்றோரின் இந்த

ஆங்கில மோகத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன இந்த தனியார் இருமொழிக்கல்வி பாடசாலைகள். தங்கள் பிள்ளைகளின் மனவெழுச்சிகள் ஒடுக்கப்படுவதைக் கூட அறியாத அப்பாவி பெற்றோர் அதிகளவான பணத்தையும் தனியார் பாடசாலைக்காக செலவிடுகின்றனர். "உலகத்தை மாற்றக் கூடிய ஒரே ஒரு ஆயுதம் கல்வி" எனும் நெல்சன் மண்டேலாவின் கூற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட கல்வி நிலையையே இன்று நாம் நம்முடைய பிரதேசங்களில் காண்கின்றோம்.

மொழி என்றால் என்ன என்றே அறியாத அந்த பிள்ளைப்பருவத்தில் பிள்ளை தனக்கு தெரிந்த தாய்மொழி தமிழை பேச முடியாமல் திணருகின்றது. பிள்ளைகள் அதன் மழலை பருவத்தில் ஒவ்வொரு வார்த்தைகளையும் கோர்த்து ஒரு வசனத்தை கொஞ்சும் தமிழில் பேசுவதே ஒரு அழகுதான். ஆனால் துரதிஷ்டவசமாக தனியார் இருமொழிக்கல்வி பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்த கொஞ்சல் மொழி பாடசாலையின் நுழைவாயிலிருந்தே மறுக்கப்படுகின்றது. பெற்றோர், உற்றார், உறவினர், அயலவர், நண்பர் என பிள்ளையை சுற்றியுள்ள சமூகம் தமிழ் மொழியில் பேசும்போது வெறுமனே ஐந்து வயதுகூட நிரம்பியிராத ஒரு பிள்ளையை அதன் காதுகளில் தினமும் கேட்கும் மொழியினை பேசக்கூடாது என்பது எந்த விதத்திலும் நியாயமல்ல. சிந்தனைக்கு அஸ்திபாரமாயுள்ள பாடசாலையே இதனை தடுப்பதும் ஒருவித குற்றமேயாகும். பிள்ளையை ஆசிரியர் அடிப்பதும் துன்புறுத்துவதும் உடல்சார்ந்த குற்றம் என்றால் அதே பிள்ளையின் உளவிருத்தியை கருத்தில் கொள்ளாது தாய்மொழி பேச்சை அதுவும் பாடசாலையினுள்ளேயே தவிர்க்க நினைப்பதும் ஒருவித குற்றமே ஆகும். தங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேசினால் தங்களுக்கு கௌரவம் என பல பெற்றோர்கள் கருதுகின்றனர். அதேவேளை மற்றவர் முன் தம்பிள்ளையை ஆங்கிலப் பாடல், கவிதை பாடினால் தான் அவர்களுக்கு பெருமை என்ற எண்ணம் வேறு. இன்னும் சிலர் தங்களுக்கு எட்டாக்கனியாக இருந்த ஆங்கில மொழியை எப்படியாவது தமது பிள்ளைகளுக்கு வலுக்கட்டாயமாக திணிக்கப் பார்க்கின்றனர். தமது பிள்ளை தங்களை அம்மா, அப்பா என்று அழைப்பதை விரும்பாமல் மம்மி (Mummi) டடி (Daddy) என்று அழைக்க சொல்லிக் கொடுக்கின்றனர். எனவே பெற்றோரின் பெருமை, கௌரவம், விருப்பம், தெரிவு என அனைத்துமே ஆங்கில மொழியைச் சுற்றியே காணப்படுகின்றது. இதனால் தங்களுக்கே தெரியாமல் தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ்மொழியை புறக்கணித்துவிட சிறுவயதிலிருந்தே கற்றுக்கொடுத்தும் விடுகின்றனர்.

## இருமொழிக் கல்வி

இருமொழிக்கல்வி என்றால் என்ன என்ற அறியாமையினால் தமது பிள்ளைகளை ஆங்கிலமொழி மூலமாக கல்வி கற்க தனியார் பாடசாலைகளில் அனுமதிக்கும் பெற்றோருக்கு இருமொழிக்கல்வி என்றால் என்ன? என்பது பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சர்வதேச பாட சாலைகள் என்ற போர்வையில் பல தனியார் இருமொழிக்கல்வி பாடசாலைகள் தமிழ் பிரதேசங்களில் அமைந்திருந்த போதிலும் வியாபார நோக்கத்திற்காகவும் தனியார் கல்விச் சந்தையில் முதலிடம் பெறவேண்டும் என்பதற்காகவும் பிள்ளைகளைத் தாய்மொழியான தமிழ்மொழியைப் பேசுவதை தடை செய்கின்றனர். தங்கள் பாடசாலை வளாகத்தினுள் நுழையும் எந்தவொரு பிள்ளையும் ஆங்கிலமொழியில் தான் பேசவேண்டும் என நிர்பந்திக்கின்றனர். தமிழ்மொழியைப் பேசக்கூடாது என்பதை எழுதப்படாத சட்டமாகவே இப்பாட சாலைகள் பின்பற்றுகின்றன.

பிள்ளையானவன் தான் கற்க விரும்பும் பாடங்களை ஆங்கிலமொழியில் கற்பது தான் இருமொழிக்கல்வி என்பதை மறந்து ஆங்கிலமொழி பேசுகின்ற நடமாடும் விளம்பரங்களாகப் பிள்ளைகளை சமூகத்திற்குள் அனுப்புகின்றனர். தங்கள் பாட சாலையின் தரத்தை உயர்த்திக் காட்டும் ஊடகங்களாகப் பிள்ளைகளைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் பிள்ளைகளைக் கொண்டு தங்கள் வியாபாரத்தை சந்தைப்படுத்தி ஒவ்வொரு வருடமும் புதிய மாணவர் அனுமதியை (Target of Students Admission) பெற்றுக்கொள்ள முயற்சி செய்கின்றனர் என்பதே உண்மை. இப்படி சமூகத்தில் காணப்படும் ஆங்கில மொழி பேசும் விளம்பரப்பலகைகளான சிறுபிள்ளைகளால் ஈர்க்கப்பட்ட பெற்றோர் தமது பிள்ளைகளையும் குறிப்பிட்ட தனியார் பாடசாலையில் கொண்டு கல்வி கற்கும்படி அனுமதிக்கின்றனர். இத்தனைக்கும் இப்பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகள் சரளமாக ஆங்கில மொழியை பேசுவதுமில்லை அரைகுறையாகக் கற்றுக் கொண்டதை அரைகுறையாகப் பேசுவதையே அவதானிக்க முடிகின்றது. காரணம் தனியார் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்வித்தகமை திருப்தியளிக்ககூடிய விதத்தில் இல்லை. ஏனெனில் அதிகமான உயர்கல்வி தகைமையுடைய ஆசிரியரைப் பணிக்கு அமர்த்தினால் அதிகளவான தொகையை அவர்களுக்கு சம்பளமாகக் கொடுக்க நேரிடும் என்பதால் தனியார் பாடசாலைகள் குறைந்தளவான தகுதிகளைக் கொண்டவர்களையே வேலைக்கு அனுமதிக்கின்றனர். அதே சமயத்தில் உயர்கல்வி தகைமையுடைய பட்டதாரிகளும் அரசபணியையே நாடுவதோடு தனியார் பாடசாலைகளில் பணிபுரிய விரும்புவதுமில்லை. எனவே குறைவான கல்வி மற்றும் தொழிற்தகைமைகளுடன் குறைவான சம்பளத்திற்குக் கடமை புரியும் ஆசிரியர்களிடம் கல்வி பயிலும் பிள்ளைகளின் கல்வித்தகைமை கேள்விக்குரியதே ஆகும்.

ஒவ்வொரு சமுதாயத்தினையும் ஆங்கில மொழி என்ற போர்வையில் தாய்மொழியான தமிழைப் புறக்கணிக்கும்படி பாடசாலைகளே வழி சமைத்துக் கொடுக்கின்றன. மாறாக பாட சாலைக்குள் பாடவேளையில் மாத்திரம் மாணவர்கள் ஆங்கிலமொழியில் பேச வேண்டும் எனவும் பாடவேளைகள் தவிர்ந்த காலை ஒன்று கூடல், இடைவேளை, மைதான விளையாட்டுக்கள், மேலதிக இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பன இடம்பெறும் போது மாணவர்கள் தாங்கள் விரும்பிய மொழியில் அல்லது தாய்மொழியான தமிழ்மொழியில் பேசமுடியும் எனவும் கூறினாலே போதுமானது.

### உரிமை மறுப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் 1948ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின்படி ஒரு மனிதன் தான் விரும்புகின்ற எந்த மொழியும் பேச அவனுக்கு உரிமை உண்டு என்கின்ற போதிலும் இச்சிறு பிள்ளைகளைப் பாடசாலைகளில் தங்கள் தாய்மொழியைப் பேசக்கூடாது என தடை செய்வது மனித உரிமைமீறலே ஆகும். இவ்வாறு தனியார் இருமொழிக்கல்வி பாடசாலை வளாகத்தினுள் பேசுவதாகயிருந்தால் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் தமிழ் மொழியையினைப் பயன்படுத்தக்கூடாது எனும் போது தமிழைத் தவிர வேறு மொழியை பேச அறியாத அந்தப்பிள்ளை அக்குறித்த பாடசாலையினுள் பேசுவதையே நிறுத்திவிடும். இது சிறுவர்களின் பேசும் உரிமையை பறித்துவிடுகின்றதே.

பிள்ளைகள் தாங்கள் விரும்பிய சூழலில் தாங்கள் விரும்பியதைப் பேசி, கற்று, மகிழ வேண்டும் என்பதே அவர்களது சிறுவயது எதிர்பார்ப்பாய் உள்ளது. பிரபல கல்வி தத்துவவியலாளரான மொன்டேசோரி (Montessori) இன் கருத்துப்படி "குழந்தைகள் முதிர்வடையும்வரை அவர்களின் அக

வளர்ச்சிக்கு உதவும் முகமாக ஒழுங்குபடுத்தப்பட்ட கல்விமுறையை உருவாக்க வேண்டும் என்றார்." நான் பிள்ளைகளைக் கற்று அவர்கள் எனக்கு வழங்கியவற்றிலிருந்து அவர்களுக்குரிய கல்விமுறை ஒன்றை உருவாக்கியுள்ளேன்" எனக் கூறியதோடு உருவாக்கியும் காட்டினார். இவ்வண்ணமாக பல்வேறுபட்ட கல்வியியலாளர்கள் பிள்ளைப் பருவ கல்வியைப் பற்றி விளக்கி அதன் முக்கியத்துவங்களை சுட்டிக் காட்டியிருக்கின்ற போதிலும் தனியார் பாடசாலைகள் குழந்தைகளின் மொழிக்குத் தடைவிதிப்பதென்பது முறையானதொன்றல்லவே.

எதைப் பேசினாலும் ஆங்கில மொழியில் தான் பேச வேண்டும் இல்லையேல் பேசக்கூடாது எனும் போது சில பிள்ளைகள் பேசவே மறுத்துவிடுகின்றனர். இவர்களின் சின்னஞ்சிறு வயது ஆனந்தங்களையும், ஆளுமைகளையும், ஏன் அனுபவங்களையும் கூட தொலைத்துவிடுகின்றனர். உதாரணமாக சக மாணவருடனோ அல்லது தனது நண்பருடனோ விளையாடும்போதும் தங்களுக்குள் பேசிக்கொள்ளும்போதும் தங்களது தாய்மொழியான தமிழில் கிடைக்கும் கனிவையும் பரஸ்பரத்தையும் இழந்துவிடுகின்றனர். மொழி தெரியாது என்ற காரணத்தினால் பிள்ளைகளின் ஐக்கியமும் ஒற்றுமையும் குறைவடையலாம், மெல்லமெல்ல ஒதுங்க ஆரம்பிப்பர். விளையாட்டு, கிண்டல், கேளிக்கை, களப்பயணம், மாணவர் மன்றம், பொருட்காட்சி, சாரணியம், முதலுதவி, மாணவர் பாராளுமன்றம் மற்றும் பல்வேறுபட்ட குழுக்கள் இவை எல்லாமே பிள்ளையின் இரண்டாம் மொழியில் தான் என்பது தமிழ் பின்னணியில் வளர்ந்த பிள்ளைக்கு சற்றுக் கடினமானதே ஆகும். ஆரம்பப்பிரிவில் ஓரிரு வகுப்புக்களை மாத்திரம் தனியார் இருமொழிக்கல்வி பாடசாலையில் படித்துவிட்டு அதிலிருந்து இடைவிலகி மறுபடியும் அரச பாடசாலைகளில் தாய்மொழியான தமிழில் தமது கல்வியைத் தொடர திரும்பி விடுகின்றனர். காரணம் பெற்றோர் தனியார் பாடசாலையில் அதிகளவான பணத்தை, இன்னும் சொல்லப்போனால் தொட்டதெற்கெல்லாம் பணத்தைக் கொட்ட வேண்டிய சூழ்நிலைக்குள்ளாகின்றனர். மத்தியதர வர்க்கத்தினைச் சார்ந்த பெற்றோர் தமது பொருளாதாரத்தினைச் சமாளிக்க முடியாமல் இலவசக் கல்விக்காக அரச பாடசாலைகளில் அனுமதிக்கின்றனர். தமிழ்மொழியே பேசக்கூடாது என்ற நிலையிலிருந்த பிள்ளைகளைத் திடீரென தமிழ் மொழிக்கற்கைக்கு உட்படுத்தினால் பிள்ளைகள் குழப்பமடைவதோடு தம்முடைய கற்றலை மேற்கொள்வதில் பெரும் சிரமமடைகின்றனர். மாணவர்கள் மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் இவர்களுக்குக் கற்பிப்பது என்பது சற்று சிரமமான காரியமாகவே உள்ளது.

அரச பாடசாலையில் குறைந்தது 17 தொடக்கம் 30 பிள்ளைகள் வரை ஒரு ஆசிரியரிடம் ஆரம்பப்பிரிவில் ஒப்படைக்கின்றனர். எனவே தமிழ் மொழியை சரிவர பேசவும் எழுதவும் முடியாத ஒரு பிள்ளையை ஒரே ஒரு ஆசிரியர் ஏனைய பிள்ளைகளுடன் சேர்த்து கற்பிப்பது என்பது கடினமான காரியமே ஆகும்.அரச பாடசாலைகளில் பெருவாரியான ஆசிரியர்கள் பாடத்திட்டம், தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் என்பவற்றை எப்படியாவது முடித்துவிட வேண்டும் என்றே முனைகின்றனர். காரணம் வலயக்கல்வி அலுவலகங்களிலிருந்து வருகைதரும் மேற்பார்வை அதிகாரிகள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிடம் பாடத்திட்டம், தேர்ச்சி என்பன பூர்த்தி செய்துவிட்டீர்களா? என்றே கேள்வி எழுப்புகின்றனர். எனவே தமிழ்மொழி புறக்கணிப்பினால் பாதிக்கப்பட்ட அக்குறித்த மாணவனுக்குத் தமிழ் மொழியைக் கற்பிப்பது என்பதே இரட்டைச் சுமையாகவுள்ளது. இப்படியிருக்க அனைத்து பாடங்களையும் தமிழ்ல் கற்பிப்பது என்பது குறித்த காலத்தில்

முடியாத காரியமே ஆகும். இருந்த போதிலும் நேரம் ஒதுக்கி மேலதிக பயிற்சிகளை மேற்கொண்டாலும் ஏனைய மாணவர்கள் வகுப்பறையில் வெறுமனே உட்கார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் ஏனைய தேர்ச்சிகளை அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதில் காலதாமதம் ஏற்படும். இதனால் ஒட்டு மொத்த மாணவர்களும் கற்பதில் பின்னடைவைச் சந்திக்க நேரிடும்.

இவற்றுக்கு மேலாக அக்குறித்த மாணவனுக்கு மறுபடியும் மறுபடியுமாக மேலதிக பயிற்சிகளைக் கொடுக்க கொடுக்க அது அவனுக்குப் பெரும்சுமையாக அமையும். காலப்போக்கில் கற்பது என்பதே அவனுக்கு கசப்பாய் தோன்றும். மன அழுத்தம் ஏற்படும். உதாரணமாக 10 பிள்ளைகளில் 9 பிள்ளைகள் இவற்றையெல்லாம் கடந்து வெற்றியடைந்தாலும் ஒரு பிள்ளை, ஒரேஒரு பிள்ளையின் நிலைமை கவலைக்கிடமாகவே உள்ளது. இது யாரும் கண்டுகொள்ளாத உண்மை என்றால் அது மிகையாகாது.

தமிழ் மொழி மூலம் கற்கவோ ஆற்றல்களை வெளிப்படுத்தவோ தெரியாமல் இப்பிள்ளைகள் பாடசாலையில் இடம்பெறும் பெரும்பாலான இடைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மேலதிக நிகழ்வுகளிலும் ஈடுபடமுடியாமல் ஒதுங்கியிருப்பதை நம்மால் அவதானிக்க முடிகின்றது. ஆகவே “ஒன்று, ஒரு பிள்ளை” என்பது நமக்கு மிகப்பெரிய பொக்கிசும் தானே. ஒவ்வொரு தனிநபர்கள் மூலம் எத்தனையோ வரலாறுகள் பிறந்திருக்கிறதே. பரவலாக நோக்குமிடத்து பிள்ளைகளின் வளர்ச்சியில் ஆரம்பத்திலேயே தமிழ் மொழியில் பேசுவது தடைசெய்யப்பட்டதே இவர்கள் பாடசாலையின் எல்லாவற்றிலுதிருந்து ஒதுங்கியமைக்குக் காரணமாக அமைகிறது.

இன்னும் சில பெற்றார் தங்கள் பிள்ளைகளின் ஆரம்பக்கல்வியை குறிப்பாக தரம் 1-5 வரை தனியார் இருமொழிக் கல்வி பாடசாலையில் கற்பித்துவிட்டு இடைநிலைக்கற்கைக்காக தரம் 6இலிருந்து அரச இருமொழிக்கல்வி பாடசாலைக்கு (Government Bilingual School) மாற்றிவிடுகின்றனர். தனியார் பாடசாலைகளில் தரமான ஆசிரியர்களிடம் கல்வி பயிலாத மாணவன் முறையான ஆங்கில மொழியையும் சரிவர பயிலாத நிலையில் அக்குறித்த மாணவனால் அரச பாடத்திட்டத்திற்கேற்ப ஆங்கில மொழியில் கற்பதும் சித்தியடைவதும் சுலபமான காரியம் அல்ல. காரணம் நம்முடைய நாட்டின் பாடத்திட்டம் முழுவதையும் தனது இரண்டாம் மொழியான ஆங்கிலத்தில் கற்பது கடினமான ஒன்றேயாகும். உதாரணமாக பிள்ளை தன்னுடைய தாய் மொழியான தமிழில் நன்கு அறிந்த ஒரு விடயத்தைகூட ஆங்கில மொழியில் புலமை போதாத காரணத்தினால் அவனால் அதனை பரீட்சையில் குறித்த நேரத்திற்குள் எழுத முடியாமல் பரீட்சையில் எதிர்பார்த்த சித்தியைப் பெறமுடியாமல் போக வாய்ப்புண்டு.

தமிழ்மொழியிலும் முறையான புலமை இல்லை ஆங்கில மொழியும் கடினம் என்னும் போது பிள்ளையின் நிலை என்னவாகும். அவனுடைய எதிர்கால இலக்கை அவனால் அடைவது என்பது கடினமானதாக இருக்கும். ஆகவே பிள்ளைகளுக்கு தமிழ்மொழியைப் பேசக்கூடாது எனும் புறக்கணிப்பைச் செய்யாமலிருந்திருந்தால் அவர்கள் அரச பாடசாலையில் அவர்களின் இடைநிலைக் கல்வியைத் தமிழ் மொழியிலேயே பயில முடியும் எந்த இடையுறுகளும் இன்றி குறித்த இலக்கையும் அடையமுடியும். ஆங்கில மொழியை தனியான ஒரு மொழியாகவே கற்றுக்கொள்ளலாம்.

தமிழ் பிரதேசங்களில் இயங்கி வரும் தனியார் இருமொழி பாடசாலைகளை நாட்டினுடைய அரசாங்கம் நிச்சயமாக மேற்பார்வை செய்ய வேண்டும். நம்முடைய நாட்டின் அசமந்தப்போக்கும், தனியார் கல்வி நிலையங்களின் ஆதிக்கமும் இல்லாதொழிக்கப்படவேண்டும். குறிப்பாக உயர்பதவிகளிலிருக்கும் தமிழ் பிரதிநிதிகளின் பார்வைக்கு இவை கொண்டுவரப்படவேண்டும். கல்விசேவை என்ற நிலையைத் தாண்டி இன்று வியாபாரமாக மாற்றப்பட்டுள்ளமையினால் ஊருக்கு ஒரு படிப்புக்கடை உருவாகி கல்வியைக் காசுக்கு விற்கவும் வாங்கவும் தொடங்கிவிட்டனர். எப்பக்கத்திலிருந்தும் பாதிக்கப்படுகிற சமூகம் நம்முடைய பிள்ளைச் சமூகமே, அவர்கள் கற்க விரும்புவதை அவர்கள் விரும்பும் மொழியில் அவர்களின் பாணியில் அவர்களின் பிள்ளைப்பருவத்தில் கற்பதில் எவருக்கும் எந்தப் பாதிப்புமில்லையே. அவர்கள் வளர்ந்து அதன்பின் தேவைக்கேற்ப அறிந்து கற்பதினால் எந்தக் கேடும் விளையப்போவதில்லையே. பிள்ளையினுடைய ஆளுமை விருத்தியிலும், விழுமிய உணர்ச்சியிலும் எந்தவித தடையும் பின்னடைவும் ஏற்படாத வண்ணம் அவர்களின் தமிழ் மொழியைத் தாராளமாக பேச இடமளிக்கின்றனரா இந்த தனியார் இருமொழிக்கல்வி பாடசாலை சமூகத்தினர் என்பதில் நாம் நிச்சயமுடையவர்களாய் இருக்க வேண்டும்.